Chundikuli Branch Library

X. M. C லொரிக்கல்

## ★ விமானத்தாக்குதலில் மரணமான கூட்டுறவு ஊழியர் குடும்பத்துக்கு 90 ஆயிரம் ரூபா நிதியுதவி

கிளிநொச்சியில் கடந்த மாதம் இடம்பெற்ற விமானத்தாக்குதலின் போது உயிரிழந்த கூட்டுறவு ஊழியரான கனகலிங்கத்தின் குடும்பத்துக்கு கரைச்சி தெற்கு ப நோ. கூ சங்க பணியாளர்கள் தொண்ணூறாயிரம் ரூபாவை வழங்கியுள்ளனர், மனைவி இல்லாத இவருக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கூட்டுறவுக் கிராமிய வங்கியில் இப்பணம் வைப்பிலிடப்பட்டுள்ள — 4 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ நடவடிக்கை காலங்களில் கடமைக்கு வராத ஊழியர்க்கு விசேடலீவு

கடந்த வருடம் வடகிழக்கு மாகாணங்களில் உருவான இராணுவ நடவடிக்கை காரணமாக வடகிழக்கு மாகாணத்துக்கு வெளியில் உள்ள இடங்களில் கடமையாற்றி மேற்கூறிய இடங்களுக்கு விடுமுறையில் சென்று பின்னர் கடமைக்கு திரும்பாமல் பதவியை விட்டு விலகிய அரச ஊழியர்கள் பின்வரும் விவரங்களை சமர்ப்பித்தால் அவர்களுக்கு விசேட லீவு வழங்கப்படும் என பொது நிர்வாக சுற்றறிக்கை 4/91 கூறுகிறது சம்பந்தப்பட்ட ஊழியர் 12 6. 90 க்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட விடுமுறையில் சென்று மேற்கூறிய நாள்களில் கடமைக்கு திரும்ப — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 147 பிரசோற்பத்தி சித்திரை 11 (24-04-1991) புதன்

## பரீட்சை மண்டபங்களை நோக்கி வல்வெட்டித்துறையில் ஷெல் தாக்குதல்

க. பொ. த உயர்தர பரீட்சை ஆரம்பித்த முதல் நாளான நேற்று பலாலியிலிருந்து வல்வெட்டித்துறைப் பகுதி நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்கள் சுமார் ஒரு மணிநேரமாக நடாத்தப்பட்டன. உடுப்பிட்டியில் க. பொ. த. பரீட்சை மண்டபத்துக்கு அருகிலும், வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரிக்கு அருகிலும் ஷெல்கள் விழுந்து வெடித்ததால் பரீட்சார்த்திகள் அச்சம் காரணமாக எழுந்து ஓட முயன்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வல்வெட்டித்துறை கடற்கரை பகுதிகளிலும், முத்துமாரி அம்மன் கோயில் அருகிலும் சில ஷெல்கள் விழுந்து வெடித்ததால் வீடுகளும் சேதமடைந்தன, வடக்கு கிழக்கில் நடைபெறும் க. பொ. த உயர் தரப்பரீட்சை மண்டபங்கள் அமைந்த பகுதிகளில் படையினர் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள் என பாதுகாப்பு அமைச்சு உறுதி வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது 38, 39

# ஆயுதங்களைக் கீழே போடாமல் பேச்சுவார்த்தை இல்லை!

## பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள்!

"விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே போடும்வரை அவர்களுடன் அரசாங்கம் எவ்வித பேச்சுவார்த்தைகளையும் நடாத்தக் கூடாது" என்று எதிர்க்கட்சியினர் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பது குறித்தான விவாதத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வடக்கு கிழக்கு பிரச்சினை பற்றி பேசும்போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து உரையாற்றிய ஜனாதிபதி இது குறித்தான எதனையும் வலியுறுத்தாது விட்டதற்கு பதிலடியாக எதிர்க்கட்சிகள் இந்த நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்

இதேவேளை அவசரகாலச் சட்டம் நேற்றிரவு 92 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றியது.

## படையினர் நானாட்டான் திரும்பினர்

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஞாயிறன்று மாவிலங்கேணி. முருங்கன்பிட்டி, செம்மண்தீவு வீதி ஆகிய பகுதிகளில் இருந்த படையினர் நானாட்டானுக்குத் திரும்பிச் சென்று விட்டனர். (81)

## முருங்கன் தபாலகம் சேதம்

முருங்கன் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் முருங்கன் தபாலகமும் பாடசாலை, தேவாலயம், கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் தபாலகம் செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தபாலகத்தில் இருந்த பெறுமதி வாய்ந்த முத்திரைகள் முருங்கன் தபாலதிபரின் முயற்சியால் வெளியில் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

## வடபகுதி மக்களுக்கு புதிய தொலைபேசி நிலையங்கள்

வடபகுதியில் இருந்து செல்பவர்களுக்காக கொழும்பில் புதிய புதிய விடுதிகளும் தனியார் தொலைபேசி நிலையங்களும் திறக்கப்படுகின்றன.

இங்கிருந்து செல்பவர்கள் வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர் பிள்ளைகளுடன் எப்படியும் தொலைபேசியில் — 4 ஆம் பக்கம் பார்க்க

## தூதரக ஊழியரை தாக்கிய மூன்று பொலிஸார் வேலை நீக்கம்

இந்திய தூதரகத்தைச் சேர்ந்த வி. இராஜேந்திரன் கொழும்பில் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக மூன்று பொலிஸார் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த தூதரக ஊழியரான வி. இராஜேந்திரன் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் தாக்கப்பட்டது தொடர்பாக இந்திய தூதரகம் நேற்று முன்தினம் தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தது-

## ஓமந்தையில் குண்டுவீச்சு 4 பொதுமக்கள் காயம்

வவுனியா மாவட்டம் ஓமந்தை, கொந்தக்காரன்குளம் பகுதிகளில் நேற்று முன்தினமும், நேற்றும் விமானக் குண்டு வீச்சுகள் நடைபெற்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டுவீச்சில் ஓமந்தையில் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். வீடு சேதமானது நேற்று மீண்டும் — 4 ஆம் பக்கம் பார்க்க

## உணவு முத்திரை வழங்குவது தேர்தலின் பின்னர் நிறுத்தப்படும்?

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உணவு முத்திரையை மீளாய்வு செய்து குறைப்பதற்கு அரசாங்கம் அண்மையில் எடுத்த நடவடிக்கையைக் கைவிட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் — 4 ஆம் பக்கம் பார்க்க

## மேதினத்தை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு

## வல்லைக் கடலில் விசைப்படகு மீது புலிகள் கலிபர் தாக்குதல்

## க. பொ. த. உயர்தர பரீட்சை நேற்று ஆரம்பமானது

நேற்று ஆரம்பமான க. ... யூறுகளுமின்றி யாழ் மாவட்

## கொழும்பில் பாதுகாப்பு

மேதினத்தை முன்னிட்டு கொழும்பில் சகல கேந்திர நிலையங்களிலும் பொலிஸ் பாதுகாப்பை அதிகரிக்கும்படி கொழும்பு நகர பொலிஸ் நிலையங்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

மேதினத்தன்று கொழும்பில் வன்முறைச் சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்தால் அது உள்ளூராட்சி தேர்தல் வாக்கை பாதிக்கும் ஓர் சம்பவமாகி விடலாம் என அரசு அஞ்சுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கோண்டாவில் டிப்போவின்

## பிரத்தியேக பாதுகாப்பு ஊழியர்கள் வேலையை இழக்கும் நிலை

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் பிரத்தியேக பாதுகாப்பு சேவையில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு அச்சேவையை கலைத்துவிட நிர்வாகம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1984-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இவர்கள் ஒப்பந்த அடிப்படையில் மனி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறை நெல்லியடியில் மண்ணெண்ணெய் விற்பனை

பருத்தித்துறைப் பகுதியில் வீடு வீடாகச் சென்று குறைந்த விலையில் மண்ணெண்ணெய் வியாபாரம் செய்யப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

நீண்ட பல மாதங்களாக கண்ணில் காண முடியாத மண்ணெண்ணெய் தற்போது வீடு வீடாக வர ஆரம்பித்ததனால் மக்கள் ஆச்சரியப்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் கலிபர் தாக்குதல்

வல்வெட்டித்துறையில் நேற்றுக்காலை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் அருகில் வரமுயன்ற கடற்படை விசைப்படகு மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

மீனவர் அருகில் வரமுயன்ற விசைப்படகை நோக்கி விடுதலைப் புலிகள் 50 கலிபர் தாக்குதல் நடாத்தியதை அடுத்து விசைப்படகு பின் வாங்கிச் சென்றுவிட்டது. (71)

## பலாலியில் மோதல்கள் ஒட்டப்புலம் நோக்கி ஷெல்

பலாலி இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மாலை மோதல்கள் நடைபெற்றன.

ஒட்டப்புலம் பகுதியில் நடைபெற்ற இம்மோதலில் புலிகள் தரப்பில் 2 லெப். மீரான் (ச. இருபாகரன் யாழ்) வீரமரணமடைந்தார்.

இம்மோதலைத்தொடர்ந்து பலாலியிலிருந்து ஒட்டப்புலம் பகுதி நோக்கி கடும் ஷெல் தாக்குதல் நடைபெற்றது. (71

## செங்கலடியில் தாக்குதல் 2 சிப்பாய்கள் பலி; ஆயுதம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை கொமாந்துறை இராணுவ முகாமில் இருந்து செங்கலடி முகாமுக்கு சென்றபடையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

செங்கலடி முகாமிலிருந்து 500 யார் தூரத்தில் நடைபெற்ற இத்தாக்குதலில் 2சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்து ரி-56-2, ரவைகூடுகள்-2, ஐ. எம். ரவைகள் 60 என்பன கைப்பற்றப்பட்டன. (71)

## நேற்று ஆரம்பமானது

நேற்று ஆரம்பமான க. பொ. த. உயர்தர விசேட பரீட்சையின் நேற்றைய பாடங்கள் எவ்வித இடையூறுகளுமின்றி யாழ் மாவட்டத்தில் நடைபெற்றதாக கல்விப்பகுதி வட்டாரங்கள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## போத்தல் விளக்கு வெடித்து இளம் பெண்ணுக்கு காயம்

மாதகலைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தமது வீட்டில் மண்ணெண்ணெயை போத்தல் விளக்குக்கு விட்டு எரித்த போது அப்போத்தல் விளக்கு திடீரென பலத்த சத்தத்துடன் வெடித்ததினால் அவர்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வர்த்தமானிகள் தாமதத்தால் விண்ணப்பிக்க முடியவில்லை

அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் உள்ள சில முக்கிய பதவிகளுக்குரிய விண்ணப்பங்களைக்கோரும் வர்த்தமானிகள் யாழ்ப்பாண மாவட்டத்துக்குகாலந்தாழ்த்திக் கிடைப்பதாகத் தெரிய வந்துள்ளது

கிராமசேவையாளர், தாதி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## லங்கா சீமெந்து ஊழியருக்கு அரைச்சம்பளம் வழங்க உத்தரவு

லங்கா சீமெந்து லிமிட்டெட் காங்கேசன்துறை ஊழியருக்கு வழங்கப்படும் சம்பளத்தின் அரைப் பகுதியை மட்டுமே இனிமேல் வழங்குமாறு கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இத் தொழிலாளர்களின் நிலைமையை

— 4 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்நகர மேதின விழாவில் கலந்துகொள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அழைப்பு!

"இம்முறை யாழ் நகரில் நடத்தப்படவுள்ள மேதின விழாவில் கலந்து கொள்ளுமாறு வெளிநாட்டுத் தூதுவர்கள், பத்திரிகையாளர்களுககு ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது."

மேற்கண்ட தகவலை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மேதின எழுச்சி விழா பற்றிய கலந்துரையாடலின்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப்பொறுப்பாளர்களில் ஒருவரான பரா வெளியிட்டார்.

இக்கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், சனசமூக நிலைய முக்கியஸ்தர்கள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் முதலானோரும். கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ராஜன் பேசுகையில் 'சனசமூக நிலையங்கள், முழுமையாகக் கலந்து கொண்டு மே தினத்தை பேரெழுச்சி விழாவாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

பிரசாரப் பிரதான பொறுப்பாளர் ஆஞ்சநேயர் பேசுகையில் "தேசிய விடுதலை, சமூக விடுதலை ஆகிய இரண்டையும் நோக்கிப் போராடுகின்றோம் யாழ் மாவட்டத்திலுள்ள 9 இலட்சம் மக்களில் 4 இலட்சம் மக்களாவது பேரணியில் பங்கு பற்றவேண்டும் என்றார். (ப-1)

## 30 அடி உயர பனை மரத்தில் 12 வினாடிகளில் ஏறி இறங்கி சாதனை

30 அடிக்கு மேற்பட்ட உயரமுடைய பனையில் பன்னிரெண்டு வினாடிகளில் ஏறி இறங்கி சாதனை படைத்து பரிசு பெற்றுள்ளார் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர்.

மானிப்பாய் பகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் கிளை அங்கத்தவர்களிடையே அண்மையில் பனை ஏறும் போட்டி யொன்றை நடாத்தியது; இப்போட்டியிலே இச்சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது.

யாழ் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள மாவட்ட ரீதியிலான போட்டியிலும் இவர் பங்குபற்றவுள்ளார். (47)

## 'பாலம்' பொதுப்பணி மன்றம் யாழ் நகரில் சேவையை ஆரம்பிக்கிறது

பாதிக்கப்பட்ட மக்களது உரிமைகளை விளங்கப்படுத்தி அவர்கள் பெறவேண்டியவற்றை நீதியின் அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்காக "பாலம்" என்னும் புதிய சமூகசேவை நிறுவனமொன்று யாழ் நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது

★ நிவாரணம் பெறத்தகுதியிருந்தும் அவற்றைப் பெற வழி தெரியாது தவிப்பவர்களுக்கு ஆலோசனைகள் கூறி வழிகாட்டல்.

★ சிரற்ற நிலையில் போக்குவரத்தைத் தொடர முடியாது யாழ் நகரில் தவிப்பவர்களுக்கும், வெளிமாவட்டங்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கும் அவர்களைப் பராமரிக்கும் உதவியாளர்களுக்கும் பாலத்தின் "சத்திரத்"தில் தற்காலிக தங்குமிடத்தை வழங்கி குறைந்த செலவில் முன்னேற்பாட்டில் உணவு வழங்குதல்

★ யாழ் மருத்துவ மனையில் பராமரிக்க எவருமின்றி அவதியுறும் நோயாளர்களுக்கு தொண்டர்களைப் பயிற்றுவித்து உதவி புரிதல் ஆகிய சேவைகளை 'பாலம்' ஆரம்பத்தில் வழங்கவுள்ளது. எதிர்காலத்தில் மேலும் பல சேவைகளையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக இதன் அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

யாழ் மருத்துவ மனைசாலையில் (மருத்துவ மனைக்கு முன்பாக) 572 ஆம் இலக்க இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள "பாலம்" பொதுப்பணிமன்றத்தின் சத்திரம் யாழ் பரியோவான் கல்லூரி முதல் ஆண்டு மாணவன் கவறன் பாபுவினால் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. (70)

## படையினருக்கு எதிரான புலிகளின் தாக்குதல் வட-கிழக்கில் அதிகரிப்பென நேற்றுசபையில் தெரிவிப்பு

கடந்த ஒருகால மாதத்தில் வடக்கு, கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளின் படையினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்திருந்ததாக நேற்று பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலம் நீடிப்பதற்கான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் வின்சன்ட் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இக்காலப் பகுதியில் வடக்கு கிழக்குப்பகுதியில் 50 இராணுவத்தினரும், 14 பொலிஸாரும் 84 குடியேற்ற வாசிகளும் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

ஆனால் இக்காலப் பகுதியில் கஜுவத்தையிலும், காரைநகரிலும் இடம்பெற்ற இரு மோதல்களில் மட்டும் கொல்லப்பட்ட 31 இராணுவத்தினரின் சடலங்கள் நல்லூரில் பொது மக்களின் பார்வைக்கு விடுதலைப் புலிகளினால் வைக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## அதிபர்கள் கூட்டம்

வேலணைக் கல்விக்கோட்டப்பகுதியில் கடமை புரியும் சகல அதிபர்களையும் வேலணை ம.ம. வித்தியாலய மண்டபத்துக்கு புதன்கிழமை காலை 10 மணிக்கு வருமாறு வேலணைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார். 71

## மட்டு. வன இலாகாவின் அலுவலகத்தை மாற்ற முயற்சி

மட்டக்களப்பு வன இலாகா அலுவலகத்தை அரசு அம்பாறைக்கு மாற்ற முனைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அலுவலகத்தில் 35க்கும் மேற்பட்ட தமிழ் ஊழியர்கள் பணிபுரிகிறார்கள் என்றும் இவர்கள் அம்பாறைக்குச் செல்வது சிரமமான செயல் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மரம் வளர்ப்பு, கடலரிப்புத் தடுப்பு மற்றும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து அலுவலகம் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் இடமாற்றம் இடம்பெற்றால் இம்மாவட்டத்திற்குப் பாதிப்புகள் பல ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

## மேஜர் டயஸ் கந்தசாமி வெற்றிக்கிண்ண போட்டிகள்

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 10 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக, மாவீரர் மேஜர் டயஸ் கந்தசாமி வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி கடந்த சனிக்கிழமை தொடக்கம் ஈச்சமோட்டை பாலக்குடி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

40 அணிகள் பங்குபற்றும் போட்டியில் இரண்டாவது சுற்று ஆட்டத்தில்ஆட, கொய்யாத்தோட்டம் வி.க, நெடுங்குளம் 'ஏ' பிரிவு ஒறீன் இங்கிலிஷ் நொதேன் வெள்ளைஜெந்னிலைனல் ஏ. பிரிவு, அரியாலை 'ஏ' பிரிவு புதிய லக்ஷ்மன் வி.க ஸ்ரீகலைமகள் ச.ச நி' புளுடைமன்ஸ், யுதிகாமஸ், லைக்கிங்ஸ், பாண்டியன் தாழ்வு வி. க ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன.

68 ஓட்டங்களையும், பந்து வீச்சில் லைக்கிங்ஸ் அணி வீரன் ரி. விநோசன் ஓட்டம் எதையும் கொடுக்காமல் தொடர்ச்சியாக 3 இலக்குகளைச்சரித்தும் சாதனை படைத்துள்ளனர்.

இவ்வாட்டங்கட்கு மத்தியஸ்தர்களாக திருவாளர்கள் சச்சிதவச்செல்வன், ஏ இராசேந்திரன், எம். கிறிஸ்ரி, ஏ. ரெட்டினானந்தன், எரிக் நிமலன், கப்ரின் டீ ஏ. எம். குணசிங்கம் ஆகியோர் கடமையாற்றினார்கள். (16)

## சிங்கள கிராமங்களைப் பாதுகாக்க புதிய திட்டம் அறிமுகம்

எல்லைப் புறங்களிலுள்ள பாதுகாப்பற்ற சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு புதிய பாதுகாப்புத்திட்டமொன்று ஏற்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி பொலிஸாருடன் அப்பகுதியைச் சேர்ந்த கிராமப்புற இளைஞர்களையும் இணைத்து ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்,

முதலில் மொனறாகலை மாவட்டத்தில் உள்ள சிங்களக் கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச கிரிக்கெட் அணியில் தென்னாபிரிக்காவும் சேர்ந்தது

தென்னாபிரிக்க வெள்ளை இன கிரிக்கெட் குழுவும் கறுப்பின கிரிக்கெட் குழுவும் ஒன்றிணைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டிலும் இனி தென்னாபிரிக்க அணி இணைந்து கொள்ளும்.

## பொற்பதி அணி வென்றது

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில், பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் கிராஸ்லிக் கல்லூரி விளையாட்டு மைதா...

## நம்மைச் சுற்றி...

அந்தப் பாடசாலையில் தமிழுக்கு விழா எடுத்தார்கள். தமிழ்த்தாயை வாழ்த்தினார்கள். சிறியதொரு முத்தமிழ் விழா. விழாவை ஒழுங்கு செய்தவர்கள், நடத்தியவர்கள், பங்கு பற்றியவர்கள் யாபேருமே தாய்க்குலம்.

தாயைத் தெய்வமாக வணங்குவது தமிழினம். ஆனால் அன்று வணங்கினார்களா? நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது சில கட்டிளம் காளைகள் முரசு கொட்டினார்கள் விநோத ஒலி எழுப்பினார்கள்: அவர்கள் தமிழை மதிக்கவில்லை. தாய்க் குலத்தை, அதிபர்களை, ஆசிரியர்களைஒருவரையுமே மதிக்கவில்லை. இவர்களிலும் வயது குறைந்த சிறார்கள் போர் முனையில் போர் முரசொலிக்கிறார்கள் இவர்கள் தமிழ் விழாவைக் குழப்ப முரசு ஒலிக்கிறார்கள். அவர்கள் உயிரைத் துச்சமாக மதித்துப் போர் புரிகையில், இவர்களோ......

—பாசுபதம்.

இவர்களோ......

—பாசுபதம்.

# தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் 90 வீதமானவை தகுதியற்றவை

தொண்டர் ஆசிரிய நியமனங்களில் 90 சத வீதமானவை ஒழுங்கான முறையில் நடைபெறவில்லை என்று கல்வி, உயர் கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி தெற்கில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பாக சில பாடசாலை அதிபர்கள் மீது புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன அதுபற்றி விசாரணை நடத்துகிறோம்.

நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்த பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சொன்னார். (33)

# அகதிகள் புனர்வாழ்வு நிதியம் இளைஞர் யுவதிகளுக்கு உதவி

விமானக்குண்டு வீச்சின் போது இடது காலை இழந்த எட்டுப்பிள்ளைகளின் தந்தையான அ. சுகிர்தராஜாவுக்கு (32) அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 83, ஒரு சைக்கிளை அன்பளிப்பாகவழங்கியுள்ளது.

நாயன்மார்கட்டு பாரதி மன்ற மாதர் சங்கத்தின் தும்புத் தொழிற்சாலைக்கு கடனாக ஐயாயிரம் ரூபாவும், நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய விவசாயக்குழுவுக்கு நீர் இறைக்கும் யந்திரம் ஒன்றையும் வழங்கியது.

இதேவேளை அ. சுகிர்தராஜாவுக்கு பாரதி சனசமூக நிலையம் ஊர் மக்களிடம் சேர்த்த நிதியையும் வழங்கியுள்ளது. 33

வைகிங்ஸ், பாண்டியன் தாழ்வு வி. க ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இதுவரை நடந்த ஆட்டங்களில் ஆகக் கூடுதலான 131 ஓட்டங்களை சென் செபஸ்தியார் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பாண்டியன் தாழ்வு வி. க. அணியும் ஆகக்குறைந்த 05 ஓட்டங்களை, வைக்கிங்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பாஷையூர் சென் அந்தனீஸ் அணியும் பெற்றமை குறிப்பிடத்தக்கது

துடுப்பாட்டத்தில் பாண்டியன்தாழ்வு வீரன் எஸ் மதன்

## தபால்கள் இன்று ஏற்கப்படும்

தற்பொழுது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'வில்லி வில்லி' கப்பல் நாளை கொழும்பு செல்ல விருப்பதால் பொது மக்கள் கடிதங்களை உடனடியாக தபாலில் சேர்க்கும்படி யாழ் பிரதம தபாலதிபர் கேட்டுள்ளார்.

இன்று பகல் 12 மணிக்கு முதல் யாழ் பிரதம தபாலகத்தில் கடிதங்களைச் சேர்க்கும் படியும் அவர் கேட்டுள்ளார். (70, 83)

பின கிரிக்கெட் குழுவும் ஒன்றிணைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஒன்றிணைந்த இந்த அணியே தென்னாபிரிக்காவின் தேசிய கிரிக்கெட் குழுவாக ஏற்றுக் கொள்ளப்பட்


## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

க.அருணாசலம், பண்டாரிகுளம், வவுனியா என்பவருடைய தேசிய அடையாள அட்டை, தொழில் அடையாள அட்டை என்பன காணவில்லை. கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து க.அருணாசலம் மே/பா. M. புஸ்பராசா, சோப் பாய் மேற்கு, கோப்பாய் எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். (04107)

### தேவை

மலைவேம்பு விதை, வாகை விதை தேவைப்படுகிறது. மில்க்வைற் யாழ்ப்பாணம். (04105)


இனி தென்னாபிரிக்க அணி இணைந்து கொள்ளும்.

## மாம்பழத் திருவிழா

நீர்வேலி, கந்தசுவாமி கோயிலில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு மாம்பழத் திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை ஏழு மணிக்குப் பாற்காவடியும் அதனைத் தொடர்ந்து பழனியாண்டவர் அபிஷேகமும் இடம் பெறும். மாலை ஆறுமணிக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட கைலயங்கிரி விமான உற்சவமும் நிகழவுள்ளது.

போட்டியில் இந்த ஆட்டம் நேற்று முன்தினம் சிராவஸ்திக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பொழுது பொற்பதி அணி அரியாலை அணியை 4 க்கு பூஜ்ஜியம் என்ற கோல்கணக்கில் தோற்கடித்து இவ்வருட சாம்பியன் ஆனது.

விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ. ஆர் எஸ். றாபசிங்கம் நெறிப்படுத்திய இப்போட்டிக்கு நடுவராக ஜீ எம்.செபஸ்தியாம்பிள்ளையும் உதவி நடுவர்களாக பீ ஆர் தம்பிநாயகம், ரீ. கருணாகரன் ஆகியோரும் கடமையாற்றினார்கள். (16)


## கொம்பியூட்டர் பயிற்சி

IDP யின் சேவை மீண்டும் ஆரம்பமாகிறது

யாழ்-மல்லாகம் கிளைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது

BASIC, D-BASE-III Courses

ஆரம்பம்: 28-04-1991 (8. 30 a. m)

★ Spoken English வகுப்புகளும் நடைபெறும்

IDP COMPUTER CENTRE
Manipay Road, Manipay.

(மானிப்பாய் ஆஸ்பத்திரி சமீபமாகவுள்ள மேல்மாடி)

04102

## கறிமஞ்சளும் காக்கைக் கொல்லியும் தடுப்புமருந்தாகின்றன பயிர்ப்பாதுகாப்பில் கிருமிநாசினிகளுக்குப் பதிலாக தாவரங்கள்!

பயிர்ப்பாதுகாப்பில் தாவரப்பொருள்களை உபயோகிக்கும் முறையை ஆய்வு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. பயிர்ப்பாதுகாப்பில் தாவரப் பொருள்களை உபயோகப் படுத்தும் முறை தற்பொழுது இந்தியா போன்ற அண்டை நாடுகளில் பிரபல்யமடைந்து வருகின்றது. பொருளாதாரத்தடை அமுலில் உள்ள வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு இப்புதிய அறிமுகம் அதிகபயனைக் கொடுப்பதுடன், உணவு உற்பத்தியில் ஏற்படும் மேலதிக செலவையும் தடுக்க உதவும் என ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

எமது பகுதிகளில் காணப்படும் காக்கை கொல்லி, தாவரத்தின் கனி, விதை என்பன நெல்லும் மூட்டுப்பூச்சி, நெல் மூட்டுப்பூச்சி, காகம் என்பவற்றை கட்டுப்படுத்தக் கூடியவை இவற்றின் விதைகளை 5 நிமிடங்களுக்கு வறுத்து தூளாக்கி; ஒருபங்கு தூளுடன் 50 பங்கு நீர் சேர்த்து நன்கு கரைத்து விசிறினால் இவற்றைக்கட்டுப் படுத்தலாம்.

ஒட்டும் தன்மையை ஏற்படுத்துவதற்காக சவர்க்காரத்தைக் கலவையில் சேர்க்கலாம். இதற்கு திரவ சவர்க்காரம் நல்லது. ஒருமேசைக்கரண்டி தூளுக்கு ஒரு கலன் நீர் சேர்த்து விசிறலாம். தூளை வெளிச்சம் படாமல் டப்பாக்களில் அடைத்துப் பாதுகாக்க வேண்டும்.

அடுத்து கறிமஞ்சள் கிழங்கு மூலமாகவும் பல்லினப்பூச்சிப்பீடைகள் பற்றீரியா என்பனவற்றை அணுகவிடாமல் தடுக்கமுடியும் கோவா, பீற்றூட், வெங்காயம் என்பவற்றைத் தாக்கும் அரிபுழு, சேனைப்புழு ஆகியவற்றை இவற்றின் மூலம் கட்டுப்படுத்தலாம் 500 கிராம் பச்சை மஞ்சளை அரைத்தெடுத்து 2 லீற்றர் நீரில் ஊறவைத்து வடித்தெடுத்த கரைசலை 20 லீற்றர் நீரில் கலந்து ஒரு ஏக்கர் மரக்கறிகளுக்கு விசிறலாம்.

# இராணுவத்தில் பலருக்கு மனநோய்!

## புதிய சிகிச்சைப் பிரிவு திறக்க நடவடிக்கை!!

மனநோய் சிகிச்சைப் பிரிவொன்றை இராணுவ வைத்தியசாலையில்ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சு அரசைக் கோரியுள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்குக்கிழக்குப் பகுதியில் பணிபுரியும் இராணுவத்தினருள் பலர் மனநோய்த்தாக்கத்திற்கு உள்ளாகி வருகின்றதை அடுத்தே இந்த நடவடிக்கைமெடுக்கப்பட்டுள்ளதாம்.

குறிப்பாக வடபகுதியில் பணிபுரியும் இராணுவத்தினர் முகாமுக்குள் முடங்கிக் கிடப்பதனாலும்,உயிராபத்து எந்நேரமும் ஏற்படலாமென்ற பீதியுடன் வாழ்வதினாலும் அவர்களில் அனேகமானோர் மனநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகி வருகின்றமை அறியப்பட்டுள்ளதாக இராணுவ வைத்தியசாலை வட்டாரத்தை மேற்கோள் காட்டி இப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ப 11)

## 1991 ஆம் ஆண்டுப்பரீட்சைகள் தடையின்றி நடக்கும் என அறிவிப்பு

1991 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர, உயர் தரப்பரீட்சைகள் எக்காரணம் கொண்டும் ஒத்திவைக்கப்படமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் மாதம் ஒன்பதாம் திகதி முதல் பதினெட்டாம் திகதிவரை நடைபெறவுள்ளது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி முதல் இருபத்தியேழாம் திகதி வரை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு இப் பரீட்சைகள் முன்கூட்டியே நடாத்தப்படலாம் என வெளிவந்த செய்திகளிலும் உண்மையில்லை எனவும் பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 2050 ரூபா படி கிட்டும்

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்குஅதிகரித்தபடியினை வழங்குமாறு கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சகல பிராந்திய கோட்டக்கல்வி அதிகாரிகளையும் சுற்று நிருபத்தின் மூலம் பணித்துள்ளார்.

1. 11 90 இல் இருந்து 31. 12. 90வரை பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு அவர்கள் தற்போது பெறும் 1750 ரூபா சம்பளத்துடன் மாதாந்தம் ரூபா 150 உம், 01. 01 91 இல் இருந்து 31. 12 91 வரை மாதாந்தம் 300 ரூபாவும் சேர்த்து வழங்கப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது

இதன்படி 1. 11. 90 இல் இருந்து 31 12, 90 வரை மாதாந்தம்1950ரூபாவாகவும் 1. 1. 90 இல் இருந்து 31. 12 91 வரை 2050 ரூபாவாகவும் இவர்களது சம்பளம் அமையும் எனவும் இச்சுற்று நிருபத்தின் மூலம் கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (78)

## நயினாதீவில் அரச கடற்படை இப்போது வண்டியும் இழுக்கிறது

நயினாதீவில் முகாமிட்டிருக்கும் ஸ்ரீலங்கா கடற்படையினர் அம்முகாமிலிருந்து குறிகாட்டுவான் பகுதிகளை நோக்கி ... திசைகளையும் நோக்கி ஷெல்களை ஏவிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (20)

## உங்களுக்கு உரியதா?

கிளிநொச்சி கணபதிப்பிள்ளை தனபாலசிங்கத்தின் தேசிய ஆளடையாள அட்டை, புங்குடுதீவு இராமையா இராஜநாயகத்தின் கடவுச்சீட்டு, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் பி. சபாரத்தினத்தின் முக்கிய குறிப்புப் புத்தகம் என்பன

அண்மைக்காலங்களில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களையும் அவர்களின் யுத்த தந்திரங்களையும் மதிப்பீடு செய்து ''தாரகி'' ஐலண்டில் எழுதிய விமர்சனத்திலிருந்து தொகுக்கப்பட்ட கருத்துக்கள் இவை.

## இராணுவத்தை நிலைகுலையச் செய்யும் பெருந்தாக்குதல்கள்!

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்தம் தொடங்கிய நாளிலிருந்து முதல் முறையாக விடுதலைப்புலிகள் தாங்கள் பெரிய அளவிலான தாக்குதல்களில் ஈடுபடமுடியுமென்பதை நிரூபித்திருக்கிறார்கள். வெவ்வேறு யுத்த முனைகளில் தாக்குதல்களையும், எதிர்த்தாக்குதல்களையும் நடத்தும் ஆற்றலும் துணிவும் தமக்குண்டு என்பதை அவர்கள் நிரூபித்துள்ளனர்.

### முன்முயற்சிகள்

கொக்காவில் பூநகரியின் முகாம்களுடன் மோதல் நிகழ்ந்த கையோடு, வேப்பங்குளத்திலும், பூவரசங்குளத்திலும், பெரும் தாக்குதலை நடத்தினார்கள். அதன் பிறகு குடாநாட்டில், காரைநகர் இராணுவ முகாம்மீது உக்கிரமான தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. விடுதலைப்புலிகளின் இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கை வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட்டது.

### ஆனையிறவின் அமைவு

வடக்கின் உள்பகுதியில் ஆனையிறவுத் தளம் ஒன்றே ஆகாயப்படையும், தரைப்படையும் செயற்படக் கூடியதாக உள்ளது. குடாநாட்டை இலங்கையின் மற்றப் பாகங்களுடன் தொடுக்கின்ற இடம்தான் இந்த ஆனையிறவு. பாதுகாப்பும் படையினரின் முகாம்கள், ஆனையிறவைத் தவிர்ந்த மற்ற இடங்களில் கடற்கரையை அண்டியோ அன்றி, நிலப்பரப்பின் எல்லையிலோ அமைந்துள்ளன. ஆனி மாதம் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு, இராணுவ முகாம்கள் அமைப்பதற்கு இடங்கள் தெரிவு செய்யப்படும்போது, பொருள்களும், ஆயுதங்களும் விநியோகிப்பதற்கான வசதிகளைப் பரிசீலித்த பின்பே முகாம்கள் நிறுவப்பட்டன.

### அரச படைக்கேற்படும் தடை

விடுதலைப் புலிகளின் முதலாம் கட்ட இராணுவ நடவடிக்கையின் போது படையினருக்குரிய உணவுப் பண்டங்களைத் தரைமார்க்கமாக விநியோகம் செய்ய முடியாத சூழ்நிலையைப் புலிகள் உருவாக்கினர். குடாநாட்டுக்குள் இருக்கும் எந்த முகாமுக்கும் வான் மூலமே பொருள்களை விநியோகம் செய்யவேண்டியுள்ளது. இலங்கையின் வடமேற்கு, வடக்குக் கரையோரங்களில் பெரிய முகாம்கள் இருக்கின்றன. கொக்காவத்துறை, தள்ளாடி, ஊர்காவற்றுறை, காரைநகர், காங்கேசன்துறை ஆகிய இடங்களிலேயே இம் முகாம்கள் உள்ளன. இதில், தள்ளாடி மட்டும் உள்ளே இருக்கின்றது. மன்னார் கடற்கரையை நோக்கி இருக்கும் இம் முகாம் பலமான பாதுகாப்பரண்களைக் கொண்டது.

### முகாமின் எல்லை

தென்பகுதி எல்லலையையும், தென் கிழக்கையும், மேற்குப் பகுதியில் கடற்கரையையும், கொக்காவத்துறை, தள்ளாடி, கொண்டச்சி, மன்னார்த் தீவுகள் ஆகியன தொடுக்கின்றன. இம் முகாம்களுக்கிடையில் செய்யப்படும் விநியோகங்களைப் புலிகள் சுலபத்தில் தடுக்க முடியும் இதே போன்று பலாலி, காங்கேசன்துறை முகாம்களுக்கிடையில் இராணுவ சாதனங்களையோ, பொருள்களையோ விநியோகிப்பதைப் புலிகளால் தடுக்க முடியும்;

### முகாம் பாதுகாப்புக்கே தாக்குதல்

இராணுவ, மற்றும் யுத்தசாதனங்களும், உணவுப் பொருள்களும் விநியோகிக்கக் கூடியதாகவுள்ள கரையோரத்தை அண்

கும் ஸ்ரீலங்கா கடற்படையி னர் அம்முகாமிலிருந்து குறி காட்டுவான் பகுதிகளை நோக்கி நாளாந்தம் ஷெல் களை ஏவி வருகின்றார்கள்.

அப்பகுதியிலுள்ள ஒரு வீட்டில் இருந்து எடுத்துவை வண்டில் ஒன்றின் மேல் ஷெல் ஏவுகின்ற மோட்டார் ஒன்றை பூட்டி அதனை அங்கும்—இங்குமாக இழுத்து வந்தே கடற்படையினர் பல

களை ஏவிவருவதாகத் தெரி விக்கப்படுகின்றது. (20)

இதன்படி 1. 11. 90 இல் இருந்து 31 12, 90 வரை

பராசக்தி வித்தியாலயம் பி. சபாரத்தினத்தின் முக்கிய குறிப்புப் புத்தகம் என்பன கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளன. உரியவர் கள் ஆசிரியபீடத்தில், அலு வலக நேரத்தில் ஆதாரம்காட் டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## சிறிய நாடுகளின் மகாநாடு அடுத்தமாதம் மாலைதீவில்

சிறிய நாடுகளின் பாது காப்பை உறுதி செய்வது குறித்த மகாநாடு ஒன்று மாலைதீவில் அடுத்தமாதமுற் பகுதியில் நடைபெறவுள்ளது.

இலங்கை உட்பட உலகின் பல சிறிய நாடுகள் இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள வுள்ளன.

சிறிய நாடுகளுக்கான பாதுகாப்பு அமைப் பொன்றை உருவாக்குவது பற்றியும் இந்த மகாநாட் டில் ஆராயப்படவுள்ளதாக வும் அறிவிக்கப்படுகின்றது.

## படிப்பகம்

இளி/இந்து மகா வித்தியா லய மாணவர் இயக்கத்தின ரால் மாங்குளத்தில் வீர மரணமடைந்த கப்டன் ரசாத் (சுரேஸ்குமார்) அவர் களின் நினைவாக படிப்பகம் ஒன்றுதிறந்துவைக்கப்பட்டது.

## எங்கும் எதிலும் கலப்படம் குடிநீரும் விதிவிலக்கல்ல

குடிநீரிலும் தற்போது கலப்படம் நடக்கிறது. தீவுப்பகுதியில குறிப்பாக புங்குடுதீவுப் பகுதியிலேயே இந்தப்புதிய கலப்படம் செய்யப்படுகின்றது.

கடும் வரட்சி காரணமாக புங்குடுதீவுப் பகுதியில் தற்பொழுதுகுடிநீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது

இந்தக் கிராக்கியைப்பயன்படுத்தி சிலர் வேலணை, சாட்டிப் பகுதிகளிலிருந்து பவுசர்களில் குடிநீரைத் தரு வித்து அத்துடன் கிணற்று நீரையும், மழைநீரையும் கலந்து ஒருகலன் இரண்டு ரூபாவாக விற்பனை செய்து வருகின்றனர்.

அதுமட்டுமன்றி குடிநீர் விற்பனையில் அளவுகளி லும் மோசடி இடம்பெறுகின்றதாம். (20)

## தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

அரச நிருவாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல் கள் அமைச்சின் கீழான சகல தற்காலிக சமயாசமய நியம னங்கள் அனைத்தும் நிரந்தர மாக்கப்படுவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டு வரு கின்றது.

இதற்கமைவாக சகல அர சாங்க அதிபர்கள், பதிவாளர் நாயகம் ஆகிய அலுவலகங் களில் பணிபுரியும் சமயாசமய தற்காலிக ஊழியர்களின் விவரங்களை அனுப்பி வைக் குமாறு அறிவிக்கப்பட்டுள் ளது.

இத்தகையவர்களின் சேவைக் காலம், நியமனத்திகதி, சேவை செய்த நிலையங்கள் ஆகிய விவரங்களே அரசாங்க அதி பர்களிடமிருந்து கோரப்பட் டுள்ளன. (66)

இராணுவ, மற்றும் யுத்தசாதனங்களும், உணவுப் பொருள் களும் விநியோகிக்கக் கூடியதாகவுள்ள கரையோரத்தை அண் டிய இராணுவமுகாம்களையே விடுதலைப் புலிகள் மையமா கக் கொண்டு தாக்கினர். இப்படிப்பட்ட முகாம்களைப் பாது காப்பதற்கு எதிர்த் தாக்குதல்களையே நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

அரசு புலிகளுக்கெதிராக மேற்கொள்ளும் எந்தத்தாக்கு தலும் மேற்கூறப்பட்ட முகாம்களிலிருந்தே தொடுக்கப்பட வேண்டும். இல்லாவிடில் வேறு இடத்திலிருந்து தொடுக்கப் படும் தாக்குதல்களுக்கு இந்த முகாம்கள் உறுதுணையாக அமைதல் வேண்டும். ஆனால் இது பெரும் கஷ்டத்தைத் தோற்றுவிக்கவில்லை.

### புலிகளுக்குள்ள வாய்ப்பு

கிளாவத்துறை, தள்ளாடி, கொண்டைச்சி, பலாலி, காங் கேசன்துறை முகாம்களைப் பொறுத்த அளவில் விடுதலைப் புலிகள் இராணுவத்தின் தாக்குதல்களைச் சிதறடிக்கலாம் அல்லது தடைசெய்யலாம். முகாம்களுக்கிடையிலான தொடர் புகளைத் துண்டிக்கலாம்.

ஊர்காவற்றுறையும், காரைநகரும் தீவுகளாக இருப்பதி னால் இராணுவத்தின் தாக்குதல்கள் வெற்றி அளிக்கும் சாத் தியமில்லை. கோட்டையைக் கைப்பற்ற எடுத்த இராணுவ நடவடிக்கை இதற்குச் சான்றாக அமைகிறது. இந்த முகாம் களுக்குத் தேவையான சகல பொருள்களும், படைவீரர்களும் கடல் மார்க்கமாகவோ, ஆகாய மார்க்கமாகவோ தான் தருவிக்கப்பட வேண்டும்.

### புலியின் பலம் வளர்ந்தால்!

விடுதலைப்புலிகள் வசம் இருக்கும் பலம் தொடர்ந்தும் இருப்பின் கடல் மார்க்கமாகவும், வான் மார்க்கமாகவும் விநி யோகங்கள் செய்வதும் காயமடைந்தவர்களை அகற்றுவதும் கஷ்டமாக இருக்கும்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கைலை எழுந்தருள்

ஊர்பெற் றிருக்கும் அரிய சிறப்புக் குயிராகி
ஊழ் வித் தழிய உளத்துள் நிறையும் உயர்ஞானச்
சீர்பெற் றினிய மனிதம் கனியக் கனியாகச்
சேர் வித் தறிவுத் துறையில் உறையும் செயல்வீர
பார்சுற் றியபொற் பதஅற் புதங்கற் பித்ததிர
பாரில் தமிழ்ச்சொற் பதஞ்சூ டிடுமநற் புகழ்மாசிப
நீர்மிக் குவதல் வளமார் வலம்பேர் பலர்வாழும்
நீர்வைக் கந்த! கைலை எழுந்தருள் பெருமாளே

(இன்று நீர்வைக் கந்தன் மாம்பழத் திருவிழாவும், கைலாச வாகனத் திருவிழாவும் நடைபெறுகின்றன.)

— மாணன்

# பொதுப் பரீட்சைகளைத் திறம்பட நடாத்த பணிக் குழுக்களை நியமிக்க நடவடிக்கை

இலங்கைப்பரீட்சைத் திணைக்களம் நடாத்தும் பொதுப் பரீட்சைகளான க. பொ. த. சாதாரண தரம், உயர்தரம் ஆகியவற்றை திறம்பட நடாத்த கல்வி உயர் கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி தீர்மானித்துள்ளார்.

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் ஆதர் வேதமுனி சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இப் பரீட்சைகளுக்குரிய இணைப்பு அலுவலர், உதவி இணைப்பு அலுவலர், மேற்பார்வையாளர், நிரந்தர நோக்குநர், நோக்குநர் ஆகியோரை விண்ணப்பங்கள் கோரி தெரிவு செய்யுமாறும் அமைச்சர் பணித்துள்ளார்.

மூன்று ஆண்டுகளாக விண்ணப்பதாரி பெற்ற அனுபவங்களும், செயலூக்கம், நேர்மை போன்ற விடயங்களின் அடிப்படையில் சிபார்சு செய்யுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய பணிக்குழுக்களை அமைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிராந்திய கல்விப்பணிப்பாளர்களின் கருத்துகள் திருத்தங்கள் ஆலோசனைகளை பரீட்சைத் திணைக்களத்துக்கு உடன் தெரியப்படுத்துமாறும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (78)

## உள்ளூராட்சித் தேர்தல் பிரசார வேலைகள் துரிதம்

அடுத்தமாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் பிரசார வேலைகளில் அரசியல் கட்சிகள் துரிதமாக ஈடுபட்டு வருகின்றன.

ஐக்கிய தேசியக்கட்சியின் பிரசாரக்கூட்டங்களில் ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சர்கள் சகிதம் பிரசார வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்.

இதேபோல எதிர்க்கட்சிகளும் அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து கூட்டங்களில் பேசிவருகின்றனர்.

வன்முறைகள் இடம்பெறா வண்ணம் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் சில வேட்பாளர்களும் பயமுறுத்தப்பட்டதாக தேர்தல் ஆணையாளருக்கு புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன (83)

## வன்னிப்பகுதி மாணவரின் உணவு முத்திரைகள் வந்தன

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஜனவரி, பெப்ரவரி மாதத்துக்கான மதிய உணவு முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன.

இம் முத்திரைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு உணவுப் பொருள்களும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களது மதிய உணவு முத்திரைகளும் வந்து சேர்ந்துள்ளன. (38)

## உணவுமுத்திரைக்குரிய பொருள் வழங்கக் கட்டுப்பாடு

6 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைப் புள்ளிகளில் முதல் மூன்று புள்ளிகளுக்கு மட்டும் தான் உணவுப் பொருள்கள் வழங்கப்படவிருக்கின்றன.

மறுஅறிவுறுத்தல் வழங்கப்படும் வரை 4 தொடக்கம் 12 வரையான புள்ளிகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்காதிருப்பதற்காக குறித்துக் கொள்ள வேண்டுமென்று நாட்டின் எல்லாப் ப. நோ. கூ. சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கு வறுமை நிவாரண ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல வேறு காரணங்களால் 5ஆவது தொடர் உணவு முத்திரையின் 9 முதல் 12 வரையான புள்ளிகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படாமலிருக்கின்றன. பெரும்பாலானவர்கள் 8ஆவது புள்ளிக்கும் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அம்முத்திரைகளின் வழங்கு காலஎல்லையை நீடித்துத் தரும்படியும் யாழ் அரச செயலகத்துக்கு அலைந்த வண்ணம் இருக்கின்றதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (47)

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மணவாளக் கோலத் திருவிழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை நவோத்திர சஹஸ்ர சங்காபிஷேகமும் மணவாளக் கோலத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

### தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில்

## இன்றுமுதல் சகலருக்குமான இலவச நிவாரணம் ஆரம்பம்

இன்று முதல் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் உணர் உணவு அட்டைக்கு சகலருக்குமான இலவச நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

சகலருக்குமான இலவச நிவாரணம் இம்மாதம் 10 ஆம் திகதி முதல் வழங்கப்படும் என யாழ் செயலகத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாததால் யாழ் குடாநாட்டில் ப. நோ. கூ. சங்கங்களால் இவ் இலவச நிவாரணத்தை வழங்க முடியாமல் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப 19)

## முல்லைத்தீவு வங்கிகளை இயங்கவைக்க முடியவில்லை

முல்லைத்தீவு மக்கள் வங்கி இலங்கை வங்கி கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக செயலற்று இருப்பதால் அப்பகுதியில் பணப்புழக்கம் மேலும் மோசமடைந்து வருகிறது

இந்த இரு வங்கிகளினதும் ஆவணங்களை மீட்டு வேறு இடங்களில் இயங்க வைக்க முல்லைத்தீவு செயலக அதிகாரிகளும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும்பயனளிக்கவில்லை யென தெரியவருகிறது. 38

## கிளிநொச்சிப் பகுதி கடிதங்கள் வவுனியாவில் தேங்கியுள்ளன

கிளிநொச்சிப் பிரதேசத்துக்குரிய தபால்களை இங்கு கொண்டுவர அரசாங்கஅதிபர் கே. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வவுனியாவுக்கு ரயில் மூலம் வந்து தேங்கிக் கிடக்கும் இக் கடிதங்களை அண்மைக்காலமாக அங்கு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை, ஊரடங்குச் சட்டம் போன்றவற்றால் எடுத்துவர முடியவில்லை எனவும் இதற்காகச் சென்ற தபால் ஊழியர்கள் திரும்பி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல முல்லைத்தீவு மாவட்டத் தபாலகங்களின் கடிதங்களும் இங்கு தேங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் உள்ள தபால் அதிகாரிகளாவது இவற்றை அனுப்பியிருக்கலாம் என கிளிநொச்சி தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ப-6, 88

## தூங்கிக் கொண்டிருக்கும் பரீட்சைப் பெறுபேறுகள்?

ஆசிரிய பயிற்சிக்கலாசாலை இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளரிடம் இருந்து கிடைத்தும் கடந்த இரண்டு மாதகாலமாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தூங்கி கிடப்பதாக தெரியவருகிறது.

இங்கு பயிற்சி முடிந்து வெளியேறிய ஆசிரியர்கள் நாட்டின் பல பாகங்களிலும் கடமை புரிகின்றனர்.

இப்பெறுபேறுகளை கலாசாலை அவர்களுக்கு அனுப்பாததால் அவர்களுக்குரிய சம்பள உயர்வு இன்னும் வழங்கப்படவில்லை.

இதேவேளை பலாலியில் பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரியர்களின் பெறுபேறுகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## முக்கிய கூட்டம்

கோப்பாய் உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களின் கூட்டம் 26 ஆம் திகதி வெள்ளி காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது. 83

## ஓய்வூதியம்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஓய்வூதியர்களது மாசி மாத ஓய்வூதியத்தை இவ்வாரம் முதல் பணமாக வழங்கி வருகிறது. (38)

---

**கூட்டுறவு...**

தாகவும் இவரின் ஒரு மகளுக்கு கூட்டுறவு அலுவலகத்தில வேலை வழங்கப்பட்டுள்ளதாகவும் இச்சங்க பொது முகாமையாளர் கே. கோபாலசிங்கம் தெரிவித்தார்.

இந்தக் காரியாலயத்தில் விமானத்தாக்குதல் இடம்பெற்றபோது ஒருவர் பலியானதும், இருவர் காயமடைந்ததும், கட்டிடம் சேதமானதும் குறிப்பிடத்தக்கது. (-ப6)

**மருதித்துறை...**

பட்டனர்.

இதே வேளை நெல்லியடிப் பகுதியிலும் முன்னர் போன்று மண்ணெண்ணெய் வியாபாரம் மீண்டும் வீதிகளில் ஆரம்பித்துள்ளது. (38)

**போத்தல்...**

பலதத ஏரிகாயங்களுக்குள்ளானார்.

பண்டத்தரிப்பு அரசினர் வைத்திய சாலையில் இவர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

கலப்படம் செய்யப்பட்ட மண்ணெண்ணெயினால்

**இராணுவ...**

முடியாத சூழ்நிலை உருவாவதை நிரூபிக்க வேண்டும்.

12 6 90 பின்னர் தமது சொந்த வீவில் சென்ற ஊழி

**வடபகுதி...**

பேசவேண்டும் என்பதால் இந்த தொலைபேசி நிலையங்களை இவர்கள் நாடவேண்டியுள்ளது

**வர்த்தமானி...**

கக் கோரிய முக்கிய பதவிகளுக்குரிய விண்ணப்பங்கள்

**இராணுவத்தை...**

விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டினுள் உள்ள அடர்ந்த காடுகளும், நன்கு அரண் அமைக்கப்பட்ட இடங்களும், இராணுவத்தின் நேரடித்தாக்குதல்களுக்கு இலக்காக மாட்டா.

காடுகளும், நன்கு அரண் அமைக்கப்பட்ட இடங்களும், இராணுவத்தன் நேரடித்தாக்குதல்களுக்கு இலக்காக மாட்டா.

சிலாவத்துறை, தள்ளாடி, கொண்டைச்சி கொத்தணி மீதும், ஊரைவற்றுறை, காரைநகர் கொத்தணிமீதும் புலிகளினால் தொடரப்பட்ட உக்கிரமான தாக்குதலோடு அவர்களின் இரண்டாம்கட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்பமாயது.

## அநுபவமும்..... அஞ்சாமையும்..... அடுத்து......?

இந்த தாக்குதல்களினால் புலிகள் என்னத்தைச் சாதிக்க எண்ணுகிறார்கள்.

பெரும் தாக்குதல்களை ஒன்றிணைந்து நடத்தும்போது இராணுவம் தடுமாறி, நிலைகுலையும் என்பதைப் பிரபாகரன் சமீபகாலங்களில் உணர்ந்துள்ளார். ஆனால் மேற்கூறப்பட்ட முகாம்களையும் புலிகளினால் கைப்பற்ற முடியாது. சிலாவத்துறையில் பெருந்தொகையான புலிகள் அழிக்கப்பட்டதையெண்ணி வீறாப்புக்கொள்கின்றவர்கள், விடுதலைப் புலிகளின் இரண்டாம் கட்டத்தாக்குதல் வடக்கில் நடத்தப்படும் போது இராணுவம் ஒரு வில்லங்கமான, இக்கட்டான நிலையில் இருக்க வேண்டி ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவத் தாக்குதலில் எதிர் நோக்கும் பின்னடைவிலும் பார்க்க இது பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் பெரும் சிக்கல்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தும் என்பதை உணரவேண்டும்.

தமிழில்: வி. பி.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, 'லக்ஷ்மி'பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 24-04. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வருகிறார்.

கலப்படம் செய்யப்பட்ட மண்ணெண்ணெயினால் தான் இவருக்கு இக்கதி நேர்ந்தது எனத்தெரிவிக்கப்படுகிறது. (13)

## பிரத்தியேக...

னார், வவுனியா சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

இது தொடர்பாக இந்த ஊழியர்கள் பொதுமுகாமையாளரையும் சாலை நிர்வாகத்தையும் சந்தித்து தமது நிலைமை குறித்து விவரமாகக் கூறி தமக்கு ஏதாவது வழியில் உதவும்படியும் கேட்டுள்ளனர்.

ஆனால் அதற்கு நிர்வாகத்தினர் எதுவுமே செய்யமுடியாதிருப்பதாகக் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## ஓமந்தை...

இப்பகுதியில் இரு விமானங்களுடன் ஹெலிக்கொப்டர் ஒன்றும் தாக்குதல் நடாத்தியுள்ளது.

இதேசமயம் வவுனியா நகரில் பயணிகள் மீது படையினர் தாக்குதல் நடாத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (71)

லதை நிரூபிக்க வேண்டும்.

12 6 90 பின்னர் தமது சொந்த லீவில் சென்ற ஊழியர் கடமைக்கு திரும்ப முடியாத சூழ் நிலை ஏற்பட்டு பதவியை விட்டு விலக்கப்பட்டிருந்தால் அவர் மேற்கூறிய நான்களில் அரசினால் அங்கீகாரமளிக்கப்பட்டிருந்த அகதி முகாமில் அல்லது அரச நிறுவனம் ஒன்றில் கையெழுத்திட்டதாகவோ அல்லது பாதுகாப்பு அதிகாரி அல்லது நகர பாதுகாவலரின் அங்கீகாரம் பெற்ற கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

மேற் கூறியவற்றை சமர்ப்பித்தால் குறிப்பிட்ட நாள்களுக்குரிய சம்பளத்தை பெற முடியும் என அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 70)

## லங்கா...

எடுத்துக்கூற தொழிற் சங்க பிரதிநிதிகள் இருவர் கொழும்பு சென்றுள்ளனர்.

அவ்வாறு அரைச் சம்பளம் வழங்கப்படும் பட்சத்தில் இந்த ஊழியர்களின் குடும்பங்களுக்கு இலவச நிவாரண உலர் உணவு அட்டை வழங்கவேண்டும் எனவும் அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளனர். (74)

களை இவர்கள் நாடவேண்டியுள்ளது

இவற்றின் கட்டணங்கள் இடத்துக்கு இடம் வித்தியாசமாக விருப்பதாகவும் அவர்கள் கேட்கும் கட்டணத்தை இவர்கள் கொடுத்தே ஆகவேண்டுமெனவும் அங்கிருந்து வருடவர்கள் தெரிவிக்கின்றனர். (33)

## க. பொ. த...

தெரிவித்தன.

பரீட்சை மண்டபங்களுக்கு முன்பு பரீட்சார்த்திகள் நேரத்துடன் பெற்றோர்களுடனும் உறவினர்களுடனும் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. குறைந்தளவு மாணவர்களே பரீட்சைக்குத் தோற்றினர்.

இடம்பெயர்ந்த மாணவர்களில் சிலர் கல்விப் பகுதி அறிவித்தது போல தத்தமது இடங்களில் பரீட்சைக்குத் தோற்றியதாக பரீட்சைப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளிலும் நேற்று பரீட்சைகள் நடைபெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன .(33, 74, 12)

## வர்த்தமானி...

கள் போன்ற முக்கிய பதவிகளுக்குரிய விண்ணப்பங்கள் உள்ள வர்த்தமானி இன்னும் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

இதனால் இப்பதவிகளுக்கு பலர் விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளனர். (33)

## உணவு...

தேர்தலில் ஏழை மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே இத்திட்டம் அரசால் கைவிடப்பட்டதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது 701 ரூபாவுக்கு குறைய வருமானம் பெறுபவர்களுக்கே உணவு முத்திரை வழங்கப்பட்டு வந்தது. ஆனால் அரசின் புதிய மீளாய்வுத் திட்டத்தின்படி முற்றாக வேலையில்லாதவரின் குடும்பத்திற்கே உணவு முத்திரை இனி வழங்கப்பட இருந்தது.

உணவு முத்திரையை நிறுத்துவது சம்பந்தமாக உலக வங்கி ஆலோசனை தெரிவித்ததாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (33)